©
GOVERNMENT OF TAMIL NADU
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs.1.60 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 259A] சென்னை, வியாழக்கிழமை, மே 5, 2022
சித்திரை 22, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு-2053

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2022–ஆம் ஆண்டு மே திங்கள் 5–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 29/2022**

**1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 43/1997.

12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (இதன் பின்பு முதன்மைச் சட்டம் என சுட்டப்படும்) 12–ஆம் பிரிவில்,–

(1) (1)–ஆம் உட்பிரிவில்,–

(i) "வேந்தர்" எனும் சொற்றொடருக்காக, "அரசு" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(i) வரம்புரையில், “வேந்தர்” மற்றும் “அவர்” எனும் சொற்றொடர்களுக்காக, முறையே, “அரசு” மற்றும் “அவர்கள்” எனும் சொற்றொடர்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (3)–ஆம் உட்பிரிவிற்கான இரண்டாம் வரம்புரையில், (a) மற்றும் (b) கூறுகளில், “வேந்தர்” எனும் சொற்றொடருக்காக, “அரசு” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

13–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 13–ஆம் பிரிவில்,–

(1) (1)–ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“(1) துணை வேந்தர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டுமென்றே விட்டுவிடுகிறார் அல்லது மறுக்கிறாரென்றோ, அவரிடம் உற்றமைந்திருக்கும் அதிகாரங்களை தவறாக பயன்படுத்துகிறாரென்றோ, அல்லது தவறாக நடக்கிறாரென்றோ, தவறாக நிர்வகிக்கிறாரென்றோ, அவரது நடத்தை ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கியதாக இருக்கிறதென்றோ அரசு கருதுமாயின் அல்லது மற்றபடி துணை வேந்தர் அவரது பதவியில் தொடர்ந்திருப்பது பல்கலைக்கழகத்தின் நலனுக்கு ஊறு விளைவிக்கும் என்று அரசுக்கு தோன்றுமாயின் அரசானது, அப்பொருட்பாடு குறித்து விசாரணை செய்வதற்கு மூன்று உறுப்பினர்களுக்கு குறையாமல் கொண்டிருக்கின்ற குழு ஒன்றினை அமைத்துருவாக்கலாம்.”.

(2) (2)–ஆம் உட்பிரிவில், “வேந்தர்” எனும் சொற்றொடருக்காக, “அரசு” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1949–ஆம் ஆண்டு குஜராத் பல்கலைக்கழகச் சட்டம் (சட்டம் 50/1949) மற்றும் 1991–ஆம் ஆண்டு தெலுங்கானா பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் (சட்டம் 4/1991), பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரை நியமிக்க, சம்பந்தப்பட்ட மாநில அரசானது அதிகாரத்தை கொண்டுள்ளது. 2000–ஆம் ஆண்டு கர்நாடகா மாநில பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் படி (சட்டம் 29/2001), துணை வேந்தரானவர் மாநில அரசின் இசைவுடன் வேந்தரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

2. மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவானது, துணைவேந்தரின் நியமனத்தில், அரசின் பங்கினை உறுதி செய்திடும் பொருட்டு 1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 43/1997) தேவையான திருத்தங்களை செய்ய பரிந்துரைத்துள்ளது.

3. மேற்சொன்னவற்றைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரை நியமிக்க, அரசுக்கு அதிகாரமளித்து மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 43/1997–ஐ திருத்தம் செய்வதென அரசானது முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ். ரகுபதி,**
*சட்டத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 மே 5.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.